# தமிழ்க் கல்விக் கழகம் - யேர்மனி

தமிழாலயங்களின் கல்வி,கலை,விளையாட்டு ஒருங்கிணைப்பு நடுவம்

Tamilische Bildungsvereinigung e.V.

Bildung, Kultur und Sport

Tamilische Bildungsvereinigung e.V. Bessemerstr 7/c 70435 Stuttgart

Bessemerstrasse 7/c
70435 Stuttgart

Tel: +49 (0)7118709767
Fax: +49(0)7118709769
info@tbvgermany.com
**www.tbvgermany.com**
Steuernummer: 99018/55410

Vereinssitz Stuttgart
Reg: VR 6607
Amtsgericht Stuttgart


சுற்றறிக்கை 09 - 2021
ஸ்ருற்காட் 30.09.2021
நடுவச் செயலகம்

தமிழாலயங்களின் நிர்வாகிகள், ஆசிரியர்கள் செயற்பாட்டுக்கும், பெற்றோர்களின் கவனத்திற்கும்,

# தமிழ்த்திறன் போட்டி 2021

தமிழ்க் கல்விக் கழகத்தின் 110க்கு மேற்பட்ட தமிழாலயங்களில் பயிலும் 6000க்கு மேற்பட்ட மாணவர்களை ஒருங்கிணைத்து ஆண்டுதோறும் நடாத்தும் தமிழ்த்திறன் போட்டி இவ்வாண்டும் நடைபெறவுள்ளது. போட்டிகளுக்கான முழுமையான விபரங்களை இச்சுற்றறிக்கை மூலமாக அறியத்தருகின்றோம். தமிழாலயப் போட்டிகளுக்குரிய மதிப்பீட்டுப் படிவங்கள் விரைவில் தமிழாலயங்களுக்கு அனுப்பிவைக்கப்படும். (எமது இணையத்திலும் தரவிறக்கலாம்.)

- போட்டிகளில் அனைத்துத் தமிழாலயங்களும் பங்குபற்றிப் பயன்பெறுதல் வேண்டும்.
- போட்டிகள் 6 வயது தொடக்கம் 18 வயது வரையிலான மாணவர்களுக்குக் கீழே குறிப்பிட்ட முறைகளில் மூன்று தெரிவுநிலைகளில் நடைபெறும்.




- மாநிலப்போட்டி **11.12.2021** சனிக்கிழமை நாடு முழுவதிலும் ஒரே நேரத்தில் ஆறு நிலையங்களில் நடைபெறும்.
- இறுதிப்போட்டி **19.02.2022** சனிக்கிழமை நடைபெறும்.

- அனைத்து வயதுப்பிரிவினரும் மனனப் போட்டியைக் கட்டாயமாகத் தெரிவு செய்வதோடு, ஏனைய போட்டிகளில் ஏதாவது இரண்டு விடயங்களைத் தெரிவுசெய்து **எல்லாமாக மூன்று போட்டிகளில்** மாத்திரம் பங்குபற்ற வேண்டும்.

- போட்டிகளில் பங்குபற்றும் அனைத்து மாணவர்களும் தமிழாலயச் சீருடையை அணிந்துவருதல் வேண்டும்.

## தெரிவுநிலை 1: தமிழாலயத்தெரிவு

- தமிழாலயப் போட்டிகள் எமது அறிவுறுத்தல்களின் அடிப்படையில் நிர்வாகியின் ஒருங்கிணைப்பின்கீழ் தமிழாலயத்தின் தமிழ்த்திறன் போட்டிப் பிரிவினரால் நடாத்தப்படுதல் வேண்டும்.

- தமிழாலயங்கள் ஒவ்வொன்றும் தெரிவுப்போட்டிகளைத் தமிழாலயரீதியாக நடாத்தி, ஒவ்வொரு போட்டியிலும் முதல் மூன்று நிலைகளைப்பெறும் போட்டியாளர்களின் விபரங்களை **15.11.2021**க்கு முன்னர் செயலகத்துக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

- தமிழாலயப் போட்டிகள் நிறைவு பெற்றபின் நடுவர்களினால் கணிக்கப்பட்ட போட்டிகளின் மதிப்பீட்டுப் படிவங்கள், போட்டிகளின் மதிப்பீட்டுத் தொகுப்புப் படிவங்கள், போட்டி முடிவுகள் அடங்கிய படிவங்கள் அனைத்தையும் செயலகத்துக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். அப்படிவங்கள் இணைத்து **அனுப்பப்படாத போட்டி முடிவுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது**.

| **வயதுப்பிரிவு** | **பங்குபற்றுவோரின் தொகையும், தெரிவாகுவோரின் எண்ணிக்கையும்** | |
|---|---|---|
| | 10க்கு குறைவான மாணவர்கள் | 10க்கு மேற்பட்ட மாணவர்கள் |
| 6 | 2 | 3 |
| 7 – 8 | 2 | 3 |
| 9 – 10 | 2 | 3 |
| 11 – 12 | 2 | 3 |
| 13 – 14 | 2 | 3 |
| 15 – 16 | 2 | 3 |
| 17 – 18 | 2 | 3 |

- தமிழாலயப் போட்டிகளின் முடிவுகளை நடுவர்கள் உடனே வெளிப்படுத்தாது நிர்வாகியிடம் மாத்திரம் வழங்கவேண்டும். எல்லாப் போட்டிகளின் முடிவுகளையும் பெற்று அவற்றைத் தொகுத்த பின்னர், முடிவுகளை நிர்வாகியும் தமிழ்த்திறன் பிரிவுச் செயற்பாட்டாளரும் இணைந்து வெளிப்படுத்த வேண்டும்.

- தமிழாலயங்கள் தமது தமிழ்த்திறன் போட்டியை நடாத்தும் நாள், நேரம், நடுவர்களின் விபரங்கள், நடுவர்களின் எண்ணிக்கை போன்ற விபரங்களை முன்கூட்டியே மாநிலச் செயற்பாட்டாளருக்குத் தெரியப்படுத்துதல் வேண்டும்.

- போட்டியின்றித் தெரிவாகும் போட்டியாளர்கள் தமக்கு வழங்கப்பட்ட விடயத்தை நடுவர்கள் முன் தமிழ்த்திறனை வெளிப்படுத்தி அதற்கு 35க்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

- 35க்குக் குறைவான புள்ளிகளைப் பெறும் போட்டியாளர்கள் மாநிலப்போட்டியில் கலந்துகொள்ளும் தகுதியை இழப்பர்.

- நடுவர்களாக அதே தமிழாலயத்தின் ஆசிரியர்களோ, நிர்வாகிகளோ, பெற்றோர்களோ கடமையாற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள். அத்துடன் **நடுவர்களுக்கான பயிற்சிப்பட்டறையில் பங்குபற்றாதவர்கள் நடுவர்களாகப் பணியாற்ற** அனுமதிக்கப்படமாட்டார்கள்.

- நடுவர்களாகப் பணியாற்றும் ஆசிரியர்களே தமிழாலயப் போட்டிகளுக்குரிய உறுப்பமைய எழுதுதல், சொல்வதெழுதுதல், வாசித்தல் ஆகிய விடயங்களை அணியம் செய்து கொண்டு செல்லுதல் வேண்டும்.

- தமிழாலயத் தெரிவுப்போட்டியிலிருந்து மாநிலத் தெரிவுப்போட்டிக்குத் தெரிவாகும் போட்டியாளர்கள் ஒவ்வொரு போட்டிக்கும் **4,00 €** செலுத்துதல் வேண்டும்.

## நிழற்படம் எடுத்து ஆவணப்படுத்துதல்:

- தமிழாலயங்களில் நடைபெறும் போட்டிகளை நிர்வாகியால் ஒழுங்கு செய்யப்பட்ட ஒருவர் நிழற்படம் எடுத்து ஆவணப்படுத்த வேண்டும். அந்த நிழற்படங்களை இறுவட்டில் அல்லது விரலியில் (USB-Stick) பதிவுசெய்து போட்டி முடிவுகளுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். கீழ்க் குறிப்பிடப்படும் விடயங்களைத் தவறாது நிழற்படம் எடுத்து ஆவணப்படுத்துதல் வேண்டும்.

  ⇒ அகவணக்கம் மற்றும் தொடக்க நிகழ்வுகள்

  ⇒ போட்டிகள் நடைபெறும் அறைகளின் ஒழுங்கமைப்புகள்

  ⇒ நடுவர்களாகச் செயலாற்ற வருகைதரும் ஆசிரியர்களின் குழுநிலைப்படங்கள்

- போட்டிகள் நடைபெறும்போது அறைகளின் நிழற்படம் எடுத்தல் முற்றாகத் தவிர்க்கப்படல் வேண்டும்.

## வயதெல்லைக் கணிப்பு அட்டவணை

| வயதுப்பிரிவு | பிறந்த நாள் முதல் | வரை |
|---|---|---|
| 6 | 01.01.2015 | 31.12.2015 |
| 7 - 8 | 01.01.2013 | 31.12.2014 |
| 9 - 10 | 01.01.2011 | 31.12.2012 |
| 11 - 12 | 01.01.2009 | 31.12.2010 |
| 13 - 14 | 01.01.2007 | 31.12.2008 |
| 15 - 16 | 01.01.2005 | 31.12.2006 |
| 17 - 18 | 01.01.2003 | 31.12.2004 |

## போட்டிகளில் பங்கேற்கும் தகுதிபெற்ற வயதுப்பிரிவுகள்

| வயதுப்பிரிவு<br>போட்டி | 6 | 7-8 | 9-10 | 11-12 | 13-14 | 15-16 | 17-18 |
|---|---|---|---|---|---|---|---|
| ஆத்திசூடி | ✓ | ✓ | | | | | |
| கொன்றைவேந்தன் | | | ✓ | | | | |
| நறுந்தொகை | | | | ✓ | | | |
| திருக்குறள் | | | | | ✓ | ✓ | ✓ |
| வாசிப்பு | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| சொல்வதெழுதுதல் | ✓ | ✓ | ✓ | ✓ | | | |
| உறுப்பமைய எழுதுதல் | ✓ | ✓ | ✓ | ✓ | | | |
| கட்டுரை | | | | | ✓ | ✓ | ✓ |
| உரையாற்றல் | | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| கவிதை | | | | | ✓ | ✓ | ✓ |
| ஓவியம் | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |

## மனனம்

- மனனமும் பொருள்கூறுதலும் பகுதிக்குள் வரும் **ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நறுந்தொகை, திருக்குறள்** போன்ற விடயங்கள் அனைத்தும் இச்சுற்றறிக்கையுடன் சிறப்பான தொகுப்புகளாக இணைக்கப்பட்டுள்ளன.
- மனனம் கூறும்போது உரையாற்றல் முறையில் அல்லாது இயல்பான முறையில் கூறப்படுதல் வேண்டும்.
- மனனப் போட்டிகளின்போது பங்குபற்றும் போட்டியாளர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் மாத்திரமே அனுமதிக்கப்படுவர்.

| வயதுப்பிரிவு | விடயம் | பாடல்கள் | பொருள் கூறுதல் |
|---|---|---|---|
| 6 | ஆத்திசூடி | 10 | - |
| 7 – 8 | ஆத்திசூடி | 10 | முதற் பத்துக்குள் கேட்கப்படும் மூன்றுக்கு |
| 9 – 10 | கொன்றைவேந்தன் | 20 | முதற் பத்துக்குள் கேட்கப்படும் மூன்றுக்கு |
| 11 – 12 | நறுந்தொகை | 20 | முதற் பத்துக்குள் கேட்கப்படும் மூன்றுக்கு |
| 13 – 14 | திருக்குறள்: இனியவை கூறல் | 10 | முதல் ஐந்துக்குள் கேட்கப்படும் மூன்றுக்கு |
| 15 – 16 | திருக்குறள்: இன்னா செய்யாமை | 10 | முதல் ஐந்துக்குள் கேட்கப்படும் மூன்றுக்கு |
| 17 – 18 | திருக்குறள்: ஈகை | 10 | முதல் பத்துக்குள் கேட்கப்படும் மூன்றுக்கு |

இப்போட்டிகளுக்குப் பொருள் கூறுதல் கேட்கப்படும்போது தனித்தனிச் சொல்லாகக் கேட்காது முழுச் சொற்றொடரையும் கூறிக் கேட்கப்படுதல் வேண்டும்.

## வாசித்தல்

- வாசிப்புப் போட்டியின்போது பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட-மாட்டார்கள்.
- வாசிப்புப் பகுதிக்குள் வரும் விடயங்கள் அனைத்தும் இச்சுற்றறிக்கையுடன் சிறப்பான தொகுப்புகளாக இணைக்கப்பட்டுள்ளன.

| வயதுப்பிரிவு | | பாடல்கள் தவிர்த்து |
|---|---|---|
| 6 | தமிழ் சிறுவர் நிலை | →முதல் 5 அலகுகளில் |
| 7 – 8 | தமிழ் ஆண்டு 1 பாடநூல் | →முதல் 5 அலகுகளில் |
| 9 – 10 | தமிழ் ஆண்டு 3 பாடநூல் | →முதல் 6 அலகுகளில் |
| 11 – 12 | தமிழ் ஆண்டு 5 பாடநூல் | →முதல் 6 அலகுகளில் |
| 13 – 14 | தமிழ் ஆண்டு 7 பாடநூல் | →முதல் 4 அலகுகளில் |
| 15 – 16 | தமிழ் ஆண்டு 9 பாடநூல் | →முதல் 6 அலகுகளில் |
| 17 – 18 | தமிழ் ஆண்டு 10 பாடநூல் | →முதல் 6 அலகுகளில் |

## உரையாற்றல்

- உரையாற்றலில் பேச்சுத்தெளிவு, கருத்துச்செறிவு, அவையோரைக் கவரும் தன்மை ஆகியவை அகத்தியமாகக் கவனிக்கப்படும். ஒவ்வொரு வயதுப்பிரிவினருக்குமான உரையாற்றும் விடயமும், நேரமும் கீழே தரப்பட்டுள்ளன. நேரம் அகத்தியமாகக் கணிக்கப்படும்.
- அவை வணக்கமும் குறிப்பிட்ட நேரத்திற்குள் அடங்கும்.
- **இவ்வுரையாற்றும்** போட்டிகள் தமிழாலயத்தின் பெற்றோர்கள், ஆசிரியர்கள், நிர்வாகிகள் முன்னிலையில் நடுவர்களால் நடாத்தப்படவேண்டும்.

| வயதுப் பிரிவு | விடயம் | நேரம் நிமிடங்கள் |
|---|---|---|
| 7 – 8 | தாயாக நம்மைக் காக்கும் தமிழ்மொழி | 3 |
| 9 – 10 | மனிதம் வளர்ப்போம்! மனிதநேயம் காப்போம்! | 3 |
| 11 – 12 | நாம் ஊமையாக இருக்கும்வரை உலகம் செவிடாகவே இருக்கும்! | 3 |
| 13 – 14 | தமிழ்மொழி எம் இனத்தின் அடையாளம்! | 4 |
| 15 – 16 | வியக்க வைக்கும் தமிழர் அறிவியல் | 4 |
| 17 – 18 | திருக்குறள் கூறும் கல்விச் சிந்தனைகள் | 4 |

## கவிதை

கீழ்வரும் தலைப்புகளில் கவிதை அமைதல் வேண்டும். போட்டியில் பங்குகொள்ளும் போட்டியாளர்கள் தாங்கள் படிக்கப்போகும் கவிதையின் **4** பிரதிகளைப் போட்டியின்போது நடுவர்களிடம் ஒப்படைத்து நடுவர்களின் அனுமதியோடு ஒரு பிரதியைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

- கவிதை பார்த்தும் படிக்கலாம்.
- அவைவணக்கம் கவிதைக்குள் அடங்காது.

கவிதைப் போட்டிகள் தமிழாலயத்தின் பெற்றோர்கள், ஆசிரியர்கள், நிர்வாகிகள் **முன்னிலையில்** நடுவர்களால் நடாத்தப்படவேண்டும்.

| வயதுப் பிரிவு | விடயம் | வரிகள் |
|---|---|---|
| 13 – 14 | தமிழ் மானத்தைக் காத்து, மரணத்தை வென்ற மாவீரர்கள்! | 18 |
| 15 – 16 | தமிழ்க் கருவறைகள் மீண்டும் - உங்களைச் சுமக்கும்! ஈழத் தமிழ்மண் பார்த்து உலகமே வியக்கும்! | 18 |
| 17 – 18 | தமிழனாய்த் தலை நிமிர்வோம்! தன்மானத்தோடு என்றும் வாழ்வோம்! | 20 |

# எழுத்துப் போட்டிகள்

**6, (7–8),** வயதுப்பிரிவினர் அனைத்து எழுத்துப் போட்டிகளிலும் **கரிக்கோலால்** (*பென்சிலால்)* மட்டுமே எழுதுதல் வேண்டும். **(9–10) தொடக்கம் (17–18)** வரையிலான வயதுப்பிரிவினர் **எழுதுகோலால்** (*பேனாவால்)* மாத்திரமே எழுதுதல் வேண்டும். தேவையான எழுதுகோல்களைப் போட்டியாளர்களே கொண்டுவருதல் வேண்டும்.

எழுத்துப் போட்டிப் பகுதிக்குள் வரும் விடயங்கள் அனைத்தும் இச்சுற்றறிக்கையுடன் சிறப்பான தொகுப்புகளாக இணைக்கப்பட்டுள்ளன.

## சொல்வதெழுதுதல்

| **வயதுப்பிரிவு** | | அலகுகள் |
|---|---|---|
| 6 | தமிழ் சிறுவர்நிலை | முதல் 5 அலகுகளில் (பாடல்கள் தவிர்த்து) |
| 7 – 8 | தமிழ் ஆண்டு 1 பாடநூல் | முதல் 5 அலகுகளில் (பாடல்கள் தவிர்த்து) |
| 9 – 10 | தமிழ் ஆண்டு 3 பாடநூல் | முதல் 6 அலகுகளில் (பாடல்கள் தவிர்த்து) |
| 11 – 12 | தமிழ் ஆண்டு 5 பாடநூல் | முதல் 6 அலகுகளில் (பாடல்கள் தவிர்த்து) |

6, (7–8), (9–10) வயதுப்பிரிவினருக்குச் சொல்வதெழுதுதல் சொல்லப்படும்போது குறியீடுகள் (காற்புள்ளி, முற்றுப்புள்ளி, வினாக்குறி போன்றன) சேர்த்துச் சொல்லப்படும். ஆனால் (11–12) வயதுப்பிரிவினருக்கு அக்குறியீடுகள் கூறப்படமாட்டாது. இவ்வயதுப்பிரிவினர் தாங்களாகவே அக்குறியீடுகளை இடுதல் வேண்டும். ஆனால் எல்லா வயதுப் பிரிவினருக்கும் பந்திபிரித்தல் கூறப்படும்.

## உறுப்பமைய எழுதுதல்

| **வயதுப்பிரிவு** | நூல் | அலகுகள் | நேரம் நிமிடங்கள் |
|---|---|---|---|
| 6 | தமிழ் சிறுவர்நிலை | முதல் 5 | 20 |
| 7 - 8 | தமிழ் ஆண்டு 1 செயல்நூல் | முதல் 5 | 20 |
| 9 - 10 | தமிழ் ஆண்டு 3 செயல்நூல் | முதல் 6 | 20 |
| 11 - 12 | தமிழ் ஆண்டு 5 செயல்நூல் | முதல் 6 | 20 |

## கட்டுரைப்போட்டி

- இப்போட்டியில் பங்குபற்றுவோருக்கு அனுமதிக்கப்பட்ட நேரம் **45** நிமிடங்களாகும். ஒவ்வொரு வயதுப்பிரிவினரும் எழுதவேண்டிய கட்டுரைத் தலைப்பும், சொற்களின் எண்ணிக்கையும் கீழே தரப்பட்டுள்ளன.
- தலைப்பின் பொருள் விளங்க, குறிக்கப்பட்ட சொற்களின் எண்ணிக்கையை மீறாது கட்டுரை விதிகளைப் பேணிக் கட்டுரையை எழுதுதல் வேண்டும்.

| வயதுப்-பிரிவு | விடயங்கள் | சொற்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 13 - 14 | "உலக மக்களை அச்சுறுத்தலுக்குள்ளாக்கி வரும் கொரோனா வைரசு" | 125 |
| 15 - 16 | தரணி போற்றும் தமிழர் பண்பாடு | 150 |
| 17 - 18 | தமிழின அறிவை முடக்க யாழ் நூலக எரிப்பு | 200 |

## மேலதிகப் போட்டி (ஓவியப்போட்டி)

- இப்போட்டி தமிழ்த்திறன் போட்டியின் வயதுப்பிரிவு விதிமுறைகளுக்கு உட்படவே நடாத்தப்படும்.
- இப்போட்டியிலும் அனைத்துத் தமிழாலயங்களும் தவறாது பங்குபற்றுதல் வேண்டும்.
- ஒவ்வொரு மாணவரும் இப்போட்டியில் மேலதிகமாகப் பங்குபற்றலாம். (தமிழ்த்திறன் போட்டியில் பங்குபெறும் போட்டிகளின் எண்ணிக்கை இவ் எண்ணிக்கைக்குள் சேர்க்கப்படமாட்டாது.)
- பெற்றோர், பார்வையாளர் அனுமதிக்கப்படமாட்டார்.
- ஓவியம் வரைவதற்கு வயதுப்பிரிவுக்கு ஏற்பத் தாள்கள் வழங்கப்படுதல் வேண்டும்.
- எழுதும் கருவிகளையும், நிறந்தீட்டும் துணைக்கருவிகளையும் பயன்படுத்தி ஓவியம் வரைதல் வேண்டும். மேலதிகமாக எதுவும் அனுமதிக்கப்படமாட்டாது (அளவுகோல், வட்டாரி போன்றவை).

| வயதுப் பிரிவு | விடயம் | நேரம் நிமிடங்கள் | தாளின் அளவு |
|---|---|---|---|
| 6 | கரடிப் பொம்மை | 60 | A4 |
| 7 - 8 | கிளித்தட்டு | 60 | A4 |
| 9 - 10 | கதிரவன் உதயம் | 60 | A3 |
| 11 - 12 | வெப்பக்காற்று பலூன் பயணம் | 60 | A3 |
| 13 - 14 | நீராடும் யானைகள் | 60 | A3 |
| 15 - 16 | பிரான்டென்போர்க் வாயில் | 60 | A3 |
| 17 - 18 | ஞாயிற்றுத் தொகுதி | 60 | A3 |

தமிழாலயப்போட்டி, மாநிலப்போட்டி ஆகியவற்றில் பங்குபற்றி, முதல் மூன்று நிலைகளைப்பெறும் மாணவர்களுக்குச் சான்றிதழ்களும், யேர்மனி தழுவிய இறுதிப்போட்டியில் பங்குபற்றி முதல் மூன்று நிலைகளைப்பெறும் மாணவர்களுக்கு 2022இல் நடைபெறவுள்ள எமது 32ஆவது அகவை நிறைவு விழாவில் சான்றிதழ்களுடன் வெற்றிக்கிண்ணங்களும் வழங்கி மதிப்பளிக்கப்படும். அத்துடன் இறுதிப்போட்டியில் பங்குபற்றும் அனைத்துப் போட்டியாளர்களுக்கும் பங்கு பற்றியதற்கான சான்றிதழ்களுடன் வெற்றிப்பதக்கமும் இறுதிப்போட்டி நடைபெறும் மண்டபத்தில் வழங்கப்படும்.

இறுதிப்போட்டியின்போது நடைபெறும் விசேட போட்டிகள் மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டியுள்ளதால் இவ்வாண்டும் அப்போட்டிகள் நடைபெறும். அவை தொடர்பான மேலதிக விபரங்கள் மாநிலப்போட்டி நிறைவு பெற்ற பின்னர் அறியத்தரப்படும்.

மாநிலப்போட்டி, இறுதிப்போட்டி ஆகிய இரு போட்டிகளின் முடிவுகள் முறையே போட்டி முடிந்த பின்னர் விரைவில் நிர்வாகிகளுக்குத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும்.

தமிழ்த்திறன் போட்டி பற்றிய மேலதிக விபரங்களுக்குச் செயலகத்துடன் **(0711/8709767)** அல்லது தமிழ்த்திறன் பிரிவுப் பொறுப்பாளர் இராஜ.மனோகரன் (கைத்தொலைபேசி: **0171/5736211**) அவர்களுடன் தொடர்புகொள்ளவும்.

2019ஆம் ஆண்டு 110 தமிழாலயங்களிலிருந்து 3888 போட்டிகளில் மாணவர்கள் கலந்துகொண்டு தங்கள் தமிழ்த்திறனை வெளிப்படுத்தினார்கள். அவர்களைத் தமிழ்க் கல்விக் கழகம் சார்பில் வாழ்த்துவதோடு, இவ்வாண்டும் அனைத்து மாணவர்களும் தமிழ்த்திறன் போட்டியிற் பங்குபற்றி உங்கள் தமிழ்த்திறனை வெளிப்படுத்தும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இச்சுற்றறிக்கையை உங்கள் ஆசிரியர், பெற்றோர், நிர்வாகக்குழுவினர் அனைவருக்கும் பிரதி செய்து தவறாது வழங்குதல் வேண்டும்.

நன்றி.

செ.லோகானந்தம் (லோகன்) 30/9/2021
பொறுப்பாளர்

இராஜ.மனோகரன்
பொறுப்பாளர்
தமிழ்த்திறன் பிரிவு

# தமிழ்க் கல்விக் கழகம் - யேர்மனி

## ஆத்திசூடி

## கொன்றைவேந்தன்

## நறுந்தொகை

## திருக்குறள்

# தமிழ்த்திறன் போட்டி 2021

மனனப் போட்டிகளுக்கான தொகுப்பு

# உள்ளடக்கம்


6 வயதுப்பிரிவுக்கு: ஆத்திசூடி

7-8 வயதுப்பிரிவுக்கு: ஆத்திசூடி

9-10 வயதுப்பிரிவுக்கு: கொன்றைவேந்தன்

11-12 வயதுப்பிரிவுக்கு: நறுந்தொகை

13-14 வயதுப்பிரிவுக்கு: திருக்குறள்: **இனியவை கூறல்**

15-16 வயதுப்பிரிவுக்கு: திருக்குறள்: **இன்னா செய்யாமை**

17-18 வயதுப்பிரிவுக்கு: திருக்குறள்: **ஈகை**

# ஆத்திசூடி

(வயதுப்பிரிவு 6)

1. அறஞ் செய விரும்பு
2. ஆறுவது சினம்
3. இயல்வது கரவேல்
4. ஈவது விலக்கேல்
5. உடையது விளம்பேல்
6. ஊக்கமது கைவிடேல்
7. எண் எழுத்து இகழேல்
8. ஏற்பது இகழ்ச்சி
9. ஐயம் இட்டு உண்
10. ஒப்புரவு ஒழுகு

# ஆத்திசூடி

(வயதுப்பிரிவு 7 – 8)

1. **அறஞ் செய விரும்பு**
   நற்காரியங்களைச் செய்வதற்கு ஆசைப்பட வேண்டும்.

2. **ஆறுவது சினம்**
   கோபத்தைத் தணியச் செய்ய வேண்டும்.

3. **இயல்வது கரவேல்**
   இயன்றதை ஒளிக்காமல் செய்ய வேண்டும்.

4. **ஈவது விலக்கேல்**
   பிறருக்கு உதவி செய்வதைத் தடுக்கக் கூடாது.

5. **உடையது விளம்பேல்**
   உன்னிடம் இருக்கும் மறைக்க வேண்டியுள்ள இரகசியத்தை பிறரிடம் சொல்லாதே.

6. **ஊக்கமது கைவிடேல்**
   செயலில் ஈடுபடும் பொழுது தடங்கல் ஏற்படுமானால் அதைக் கண்டு தைரியத்தை கைவிடக் கூடாது.

7. **எண் எழுத்து இகழேல்**
   கணிதம், இலக்கியம் இவற்றை இகழ்ந்து ஒதுக்கக் கூடாது.

8. **ஏற்பது இகழ்ச்சி**
   பிறரிடம் போய் பிச்சையெடுப்பது இழிவான செயலாகும்.

9. **ஐயம் இட்டு உண்**
   பிச்சை கேட்பவர்க்கு உணவு கொடுத்த பின்னர் சாப்பிட வேண்டும்.

10. **ஒப்புரவு ஒழுகு**
    உலக அனுபவத்தை அறிந்து அதற்கேற்ப நடந்துகொள்

# கொன்றைவேந்தன்

(வயதுப்பிரிவு 9 – 10)

1. **எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்**
   ⇨ *கணக்கும் இலக்கியமும் கண்களைப் போல சிறப்பானவை.*

2. **குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை**
   ⇨ *குற்றம் குறைகளையே சொல்லிக் கொண்டிருந்தால் சுற்றத்தார் என யாருமே இருக்கமாட்டார்.*

3. **கைப் பொருள் தன்னில் மெய்ப் பொருள் கல்வி**
   ⇨ *கைவசம் இருக்கும் செல்வத்தைக் காட்டிலும் கல்வியே நிரந்தரமான உண்மையான செல்வமாகும்.*

4. **சான்றோர் என்கை ஈன்றோர்க்கு அழகு**
   ⇨ *தன்னுடைய பிள்ளைகளை உலகத்தார் அறிஞர் என்று போற்றுவதே தாய்க்குச் சிறப்பாகும்.*

5. **தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை**
   ⇨ *தகப்பனார் கூறும் அறிவுரைக்கு மிஞ்சிய சாத்திரம் வேறு இல்லை.*

6. **தாயிற் சிறந்து ஒரு கோயிலும் இல்லை**
   ⇨ *தாயையே வணங்க வேண்டும். அதற்கு மேலான கோயில் எதுவுமே இல்லை.*

7. **திரை கடல் ஓடியும் திரவியம் தேடு**
   ⇨ *அலைகடலுக்கு அப்பால் சென்றாவது பொருள் தேட வேண்டும்.*

8. **தோழனோடும் ஏழைமை பேசேல்**
   ⇨ *நெருங்கிய நண்பனிடத்திலும் கூட வறுமை நிலையைச் சொன்னால் மிகவும் கேவலமாக நினைப்பான்.*

9. **நல் இணக்கம் அல்லது அல்லல் படுத்தும்**
   ⇨ *நல்லவர்கள் தொடர்பு நன்மையாகும். கெட்டவர்கள் தொடர்பு தீமையாகும்.*

**10. நாடு எங்கும் வாழக்கேடு ஒன்றும் இல்லை**

⇨ *தேசம் பூராவும் செழித்துத் தழைத்தால் துன்பமே இல்லை.*

**11. நிற்கக் கற்றல் சொல் திறம்பாவை**

⇨ *நிலையான கல்வி கற்றவர் என்பவர் வாக்குறுதி உள்ளவரே ஆவர்.*

**12. நுண்ணிய கருமமும் எண்ணித் துணி**

⇨ *மிகச் சிறிய செயலானாலும்கூட தீர யோசித்தே செய்யவேண்டும்.*

**13. பாலோடு ஆயினும் காலம் அறிந்து உண்**

⇨ *பாலினால் தயாரித்த உணவுப் பொருளானாலும் நேரம் தவறி சாப்பிடக் கூடாது.*

**14. பையச் சென்றால் வையம் தாங்கும்**

⇨ *மெதுவாகச் செய்யக் கூடிய செயல் வெற்றி அளிக்கும்.*

**15. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்**

⇨ *முன் பகுதியில் யாருக்கேனும் தீங்கு செய்திடில் பிற்பகுதியில் தனக்கே தீங்கு நேரிடும்.*

**16. மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்**

⇨ *அறிவு சான்ற பெரியோர்கள் சொல்லும் அனுபவ மொழிகள் அமிர்தம் போன்றவை ஆகும்.*

**17. உரவோர் என்கை இரவாது இருத்தல்**

⇨ *அறிஞர் எனக் கூறப்படுவோர் எவரிடமும் சென்று யாசியாமல் இருப்பதே சிறப்பு.*

**18. ஊக்கம் உடைமை ஆக்கத்துக்கு அழகு**

⇨ *மனம் தளராமல் உறுதியோடு இருப்பது செழிப்புக்கு உயர்வாகும்.*

**19. வைகல் தோறும் தெய்வம் தொழு**

⇨ *நாள் தோறும் கடவுளை வணங்குதல் நன்மை தரும்.*

**20. ஓதாதவர்க்கு இல்லை உணர்வோடு ஒழுக்கம்**

⇨ *நீதி நூல்களைப் படிக்காதவர்களுக்கு நல்லொழுக்க அறிவு இருக்காது.*

# நறுந்தொகை

(வயதுப்பிரிவு 11 – 12)

1. **எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆகும்**
   ⇨ *எழுத்துக்களை, கல்வியை முதலில் கற்றுத் தந்தவர் தெய்வத் தன்மையானவர்.*

2. **கல்விக்கு அழகு கசடு அற மொழிதல்**
   ⇨ *கல்வி கற்றதற்குச் சிறப்பு, குற்றம் இல்லாமல் தெளிவாகப் பேசுதல் ஆகும்.*

3. **செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்**
   ⇨ *பணக்காரர்களுக்குச் சிறப்பு, தங்கள் உறவினர் துன்புறும்போது தகுந்த உதவி அளித்து ஆதரிப்பது.*

4. **மன்னவர்க்கு அழகு செங்கோல் முறைமை**
   ⇨ *அரசர்க்குச் சிறப்பு, நீதி வழுவாமல் ஆட்சி புரிவது.*

5. **வைசியர்க்கு அழகு வளர் பொருள் ஈட்டல்**
   ⇨ *வியாபாரிக்குச் சிறப்பு, நேர்மையாகப் பொருள் சம்பாதிப்பது.*

6. **உண்டிக்கு அழகு விருந்தோடு உண்டல்**
   ⇨ *உணவுக்குச் சிறப்பு, விருந்தாளிகளுடன் அமர்ந்து உண்பது.*

7. **அறிஞர்க்கு அழகு கற்று உணர்ந்து அடங்கல்**
   ⇨ *அறிவாளிகளுக்குச் சிறப்பு கற்று அறிந்து, அடக்கமாக இருப்பது.*

8. **வறிஞர்க்கு அழகு வறுமையில் செம்மை**
   ⇨ *தரித்திர நிலைமையில் இருந்த போதிலும் அப்பொழுது நேர்மையோடு இருப்பது சிறப்பாகும்.*

9. **அரைக்கினும் சந்தனம் தன் மணம் மாறாது**
   ⇨ *சந்தனக் கட்டையை எவ்வளவு அரைத்தாலும் அதன் மணம் குறையாது.*

10. **கலக்கினும் தண் கடல் சேறு ஆகாது**
    ⇨ *சமுத்திரத்தை எவ்வளவு கலக்கினாலும் சேறு ஆகாமல் தெளிவாக இருக்கும்.*

11. **சிறியோர் செய்த சிறுபிழை எல்லாம்**
**பெரியோர் ஆயின் பொறுப்பது கடனே**

⇨ *சிறுவர்கள் அறியாமல் செய்த தவறுகளை எல்லாம் பெரியவர்கள் பொறுத்துக் கொள்வது கடமை ஆகும்.*

12. **நூறு ஆண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை**
**நீர்க்குள் பாசிபோல் வேர் கொள்ளாதே**

⇨ *முரடர்களோடு நூறு ஆண்டுகள் பழகினாலும், அந்தப் பழக்கமானது நீரிலுள்ள பாசிபோல் காணப்படுமே ஒழிய, வேர் கொள்ளாது.*

13. **ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை**
**இரு நிலம் பிளக்க வேர் வீழ்கும்மே**

⇨ *பெரியார்களுடன் ஒருநாள் பழகிய போதிலும் அந்தப் பழக்கமானது பூமிக்குள் வேர் விடுவது போன்றது ஆகும்.*

14. **கற்கை நன்றே கற்கை நன்றே**
**பிச்சை புகினும் கற்கை நன்றே**

⇨ *கல்வி பயில்வது நன்மையே தரும். பிச்சை எடுக்க நேரிட்டாலும் கல்வி கற்பது நன்மையே அளிக்கும்.*

15. **அறிவுடை ஒருவனை அரசும் விரும்பும்**

⇨ *அறிவுடையோரை அரசும் விரும்பும் மதிக்கும்.*

16. **அச்சமும் நாணமும் அறிவு இல்லோர்க்கு இல்லை**

⇨ *அறிவு இல்லாதவர்கள் தீமையைக் கண்டு பயப்படமாட்டார்கள். பழியைக் கண்டு நாணமாட்டார்கள்.*

17. **கேளும் கிளையும் கெட்டோர்க்கு இல்லை**

⇨ *கெட்டுப் போனவர்களுக்கு, நண்பர்களோ சுற்றத்தார்களோ இல்லை.*

18. **உடைமையும் வறுமையும் ஒரு வழி நில்லா**

⇨ *செல்வமும் வறுமையும் ஒரு இடத்திலே நிற்பது இல்லை.*

19. **இரந்தோர்க்கு ஈவதும் உடையோர் கடனே**

⇨ *வசதி உடையோர் யாசிப்பவர்க்கு கொடுப்பதும் கடமையே.*

20. **தறுகண் யானை தான் பெரிது ஆயினும்**
**சிறுகண் மூங்கில் கோலுக்கு அஞ்சுமே**

⇨ *வீரம் மிக்க யானை பெரிதாக இருந்தாலும் சிறு கணுக்களுடைய மூங்கில் கோலுக்குப் பயப்படும்.*

# திருக்குறள்

(வயதுப்பிரிவு 13 – 14)

## இனியவை கூறல்

91
**இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.**

*இன்சொற்களாவன வஞ்சனையில்லா அன்போடு கலந்த
மெய்ப்பொருள் உணர்ந்தவரின் சொற்களே ஆகும்.*

92
**அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொல னாகப் பெறின்.**

*மனம் மகிழ்ந்து ஒருவனுக்கு ஒன்றைக் கொடுப்பதை விட,
முகம் மலர்ந்து இன்சொல் பேசுதல் சிறந்ததாகும்.*

93
**முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம்.**

*அறம் என்று சொல்லப்படுவது, முகம் மலர்ந்து பார்த்து,
உள்ளத்தில் எழும் அன்பு உணர்ச்சியினால் இனிய
சொல்லைச் சொல்லுவதேயாகும்.*

94
**துன்புறூஉந் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு.**

*எவரிடத்தும் இன்பத்தைக் கொடுக்கும் இனிய சொற்களைப்
பேசுகின்றவர்களுக்கு, துன்பத்தைக் கொடுக்கும்
வறுமை வந்து சேராது.*

95
**பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற.**

*ஒருவனுக்கு அணியாவது, பெரியோரிடத்தில் வணக்கமும்,
எல்லோரிடத்தும் இனிய சொல்லும் உடையவனாதலே;
இவையல்லாமல் உடம்பில் அணியும் வேறு அணிகள் அணிகளாகா.*

96
**அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை**
**நாடி இனிய சொலின்.**

*நன்மையைத்தரும் சொற்களை ஆராய்ந்து ஒருவன்*
*இனிமையாகச் சொல்வானானால், தீமைகள் கெட்டு*
*அறம் வளரும்.*

97
**நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று**
**பண்பின் தலைப்பிரியாச் சொல்.**

*பிறருக்கு நன்மையைக் கொடுத்து இனிமைப் பண்பிலிருந்து*
*நீங்காத சொல், நேர்மையான வாழ்க்கையையும் நல்வழியில்*
*நடப்பதால் உண்டாகும் பயனையும் கொடுக்கும்.*

98
**சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்**
**இம்மையும் இன்பந் தரும்.**

*பிறருக்குத் துன்பம் கொடுக்காத இனிய சொல்,*
*ஒருவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் இன்பம் தரும்.*

99
**இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ**
**வன்சொல் வழங்கு வது.**

*பிறர் சொல்லும் இனிய சொல் தனக்கு இனிமையாக*
*இருத்தலை உணர்கின்றவன், பிறரிடம் கடுஞ்சொல்*
*பேசுவது ஏன்?*

100
**இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.**

*இனிய சொற்களைக் கூறாமல் இனியவையில்லாத*
*கடுஞ்சொற்களை ஒருவன் கூறுதல், தன்னிடம் உள்ள கனியை*
*உண்ணாது, இனிமையில்லாத காயை உண்பது போன்றதாகும்.*

# திருக்குறள்

(வயதுப்பிரிவு 15 – 16)

## இன்னா செய்யாமை

311
**சிறப்புஈனும் செல்வம் பெறினும் பிறர்க்குஇன்னா
செய்யாமை மாசற்றார் கோள்.**

*சிறப்பைத் தரும்படியான செல்வத்தைப் பிறர்க்குத் துன்பம் செய்து பெறலாமாயினும், அதனைச் செய்யாமையே மனத்தூய்மை உடையவரின் கொள்கையாகும்.*

312
**கறுத்துஇன்னா செய்தவக் கண்ணும் மறுத்துஇன்னா
செய்யாமை மாசற்றார் கோள்.**

*ஒருவன் தன்மீது பகை கொண்டு துன்பம் செய்தவிடத்தும், அவனுக்குத் துன்பம் செய்யாமை, குற்றமற்றவரின் கொள்கையாகும்.*

313
**செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமம் தரும்.**

*தான் முன்பு துன்பம் செய்யாதிருக்க, தன்மீது பகைகொண்டு தனக்குத் துன்பம் செய்தவர்க்குத் தான் எதிர்த்துன்பம் செய்தால், அது பிழைத்ததற்கரிய துன்பத்தைக் கொடுக்கும்.*

314
**இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்.**

*தனக்குத் துன்பம் செய்தவரைத் தண்டித்தலாவது, அவரே நாணும்படியாக அவருக்கு நன்மைகளைச் செய்து, அவர் செய்த தீமையையும் தான் செய்த நன்மையையும் மறத்தலாகும்.*

315
**அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை.**

*பிற உயிருக்கு வரும் துன்பத்தைத் தமக்கு வந்த துன்பமாகக் கருதி அதனைக் காப்பாற்றாதவிடத்து அறிவினால் பயன் உள்ளதோ?*

316
**இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை**
**வேண்டும் பிறன்கண் செயல்.**

*துன்பம் தருவன என்று தான் அறிந்தவற்றைப் பிறரிடத்தில்*
*செய்தலைப் புரியாதிருக்க வேண்டும்.*

317
**எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்**
**மாணாசெய் யாமை தலை.**

*தன் மனமாரத் துன்பம் தருபவை என்று தன்னால்*
*அறியப்பட்டவற்றை எவருக்கும், எவ்வளவு சிறிதும்*
*செய்யாதிருத்தல் தலைசிறந்த அறமாகும்.*

318
**தன்னுயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொலோ**
**மன்னுயிர்க்கு இன்னா செயல்.**

*பிறர் செய்யும் துன்பம் தன்னுயிர்க்குத் துன்பம்*
*தருவதை அறிந்தும், தான் பிற உயிர்க்கு*
*அதனைச் செய்தல் என்ன காரணத்தால்?*

319
**பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா**
**பிற்பகல் தாமே வரும்.**

*ஒருவன் பிறர்க்கு முற்பொழுதில் துன்பம் செய்தால்,*
*அவனுக்குத் துன்பம் பிற்பொழுதில் பிறர்*
*செய்யாமல் தானே வரும்.*

320
**நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்**
**நோயின்மை வேண்டு பவர்.**

*துன்பங்களெல்லாம் துன்பம் செய்தவரையே வந்தடையும்.*
*ஆகையால், துன்பமில்லாதிருக்க விரும்புவோர்*
*எவ்வுயிர்க்கும் துன்பம் செய்யமாட்டார்.*

# திருக்குறள்

(வயதுப்பிரிவு 17 - 18)

## ஈகை

221
**வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.**

*இல்லாதவர்களுக்கு ஒரு பொருளைக் கொடுப்பதுதான் கொடையாகும்; மற்றவர்களுக்குக் கொடுக்கும் கொடையெல்லாம் பயனை எதிர் பார்க்கும் தன்மையை ஒத்தன.*

222
**நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று.**

*மற்றவரிடமிருந்து பொருளைப் பெறுதல் நல்லதாயினும் இரத்தல் தீது; கொடுப்பவர்க்கு மேலுலகம் அடைதல் இல்லை என்றாலும் கொடுத்தலே நல்லது.*

223
**இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள.**

*இரந்து வந்தவர்க்கு இல்லை என்னும் துன்பம் தரும் வார்த்தையைச் சொல்லாமல், கொடுத்தல் உயர் குடிப் பிறந்தவரிடத்தில் உள்ளது.*

224
**இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகங் காணும் அளவு.**

*இரப்பவர், வாழ விரும்பிய பொருளைப் பெற்று மகிழ்வதைக் காணும் வரையில் இரப்பதைப் போலவே இரப்பதைக் கேட்பதும் கொடுப்பவர்க்குத் துன்பமாகத்தான் இருக்கும்.*

225
**ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்.**

*தவத்தால் வலியார்க்கு ஏற்படும் வல்லமையாவது தமக்கு நேரும் பசியைப் பொறுத்தலாகும். இவ்வலிமை, பொறுத்தற்கரிய பசியைக் கொடையால் தீர்ப்பவரின் வலிமையை விடத் தாழ்ந்ததே.*

226
**அற்றார் அழிபசி தீர்த்தல் அ∴தொருவன்**
**பெற்றான் பொருள்வைப் புழி.**

*வறியவரின் கடும்பசியைத் தீர்க்கவேண்டும். அதுவே*
*பொருள் உடையவனுக்கு அதைச் சேமித்து*
*வைப்பதற்குரிய இடமாகும்.*

227
**பாத்தூண் மரீஇ யவனைப் பசிஎன்னும்**
**தீப்பிணி தீண்டல் அரிது.**

*பகுத்து உண்டு பழகியவனை பசி என்னும் பொல்லாத*
*நோய் சேர்தல் இல்லை.*

228
**ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை**
**வைத்திழக்கும் வன்க ணவர்.**

*தமது செல்வத்தைச் சேர்த்து வைத்துப் பின் அதனை*
*இழந்து போகின்ற கொடியவர், வறியவர்க்குக்*
*கொடுத்து அவர்கள் மகிழ்வதால் தமக்கு உண்டாகும்*
*இன்பத்தை அறிய மாட்டார்கள்.*

229
**இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய**
**தாமே தமியர் உணல்.**

*தேடி நிரப்பிய உணவைத் தாமே தனியராக இருந்து*
*உண்ணுதல் இரத்தலை விடத் துன்பம் தருவதாகும்.*

230
**சாதலின் இன்னாத தில்லை இனிதூம்**
**ஈதல் இயையாக் கடை.**

*சாவதைப் போலத் துன்பம் தருவது வேறொன்றில்லைÉ*
*வறியவர்க்கு ஒன்று கொடுக்க முடியாத*
*இடத்தில் சாவதும் இனியதாகும்.*

# தமிழ்த்திறன் போட்டி 2021

- சிறப்புத் தொகுப்பு -

| வயதுப்பிரிவு | நூல் | பக்கம் |
|---|---|---|
| 6 | தமிழ் சிறுவர் நிலை | • **பாடம் 1: நான்**<br>- எழுத்துகள், சொற்கள் அறிவோம் (பக்கம் 4)<br>- எழுத்துகள், சொற்கள் அறிவோம் (பக்கம் 7)<br>• **பாடம் 2: எனது குடும்பம்**<br>- எழுத்துகள், சொற்கள் அறிவோம் (பக்கம் 15)<br>- எழுத்துகள், சொற்கள் அறிவோம் (பக்கம் 18)<br>• **பாடம் 3: எனது வீடு**<br>- எழுத்துகள், சொற்கள் அறிவோம் (பக்கம் 25)<br>- எழுத்துகள், சொற்கள் அறிவோம் (பக்கம் 28)<br>• **பாடம் 4: உணவுகள்**<br>- எழுத்துகள், சொற்கள் அறிவோம் (பக்கம் 36)<br>• **பாடம் 5: உடைகள்**<br>- எழுத்துகள், சொற்கள் அறிவோம் (பக்கம் 45)<br>- எழுத்துகள், சொற்கள் அறிவோம் (பக்கம் 49) |
| 7 – 8 | தமிழ் ஆண்டு 1 பாடநூல் | • **பாடம் 1: தமிழ்ப்பள்ளி**<br>- ஒலித்துப் படிப்போம் (பக்கம் 7)<br>- படித்துப் பழகுவோம் (பக்கம் 8)<br>• **பாடம் 2: விடுமுறை**<br>- ஒலித்துப் படிப்போம் (பக்கம் 14)<br>- படித்துப் பழகுவோம் (பக்கம் 15)<br>• **பாடம் 3: நண்பர்கள்**<br>- ஒலித்துப் படிப்போம் (பக்கம் 22)<br>- படித்துப் பழகுவோம் (பக்கம் 23)<br>• **பாடம் 4: அன்னையர் நாள்**<br>- ஒலித்துப் படிப்போம் (பக்கம் 30)<br>- படித்துப் பழகுவோம் (பக்கம் 31)<br>• **பாடம் 5: தைப்பொங்கல்**<br>- ஒலித்துப் படிப்போம் (பக்கம் 35)<br>- இணைந்து செயற்படுவோம் (பக்கம் 37)<br>- படித்துப் பழகுவோம் (பக்கம் 38)<br>- படித்துப் பழகுவோம் (பக்கம் 39)<br>- படித்துப் பழகுவோம் (பக்கம் 40) |

# தமிழ்த்திறன் போட்டி 2021

- சிறப்புத் தொகுப்பு -

| | | |
|---|---|---|
| 9 – 10 | தமிழ் ஆண்டு 3 பாடநூல் | • **பாடம் 1: எமது மொழி**<br>- படிப்போம் (பக்கம் 2)<br>- தெரிந்து கொள்வோம் (பக்கம் 2)<br>- அறிவோம் (பக்கம் 5 - 6)<br>- வாசிப்போம் (பக்கம் 6)<br><br>• **பாடம் 2: முக்கனிகள்**<br>- படிப்போம் (பக்கம் 8)<br>- கதை கேட்போம் (பக்கம் 9)<br>- தெரிந்து கொள்வோம் (பக்கம் 10)<br>- அறிவோம் (பக்கம் 11)<br><br>• **பாடம் 3: கொடை**<br>- படிப்போம் (பக்கம் 13)<br>- இணைந்து செயற்படுவோம் (பக்கம் 15)<br>- அறிவோம் (பக்கம் 16)<br><br>• **பாடம் 4: ஒற்றுமை**<br>- படிப்போம் (பக்கம் 18)<br>- அறிவோம் (பக்கம் 21)<br><br>• **பாடம் 5: மட்டக்களப்பு**<br>- படிப்போம் (பக்கம் 23)<br><br>• **பாடம் 6: பண்டாரவன்னியன்**<br>- படிப்போம் (பக்கம் 28)<br>- இணைந்து செயற்படுவோம் (பக்கம் 29)<br>- அறிவோம் (பக்கம் 30 - 31) |
| 11 – 12 | தமிழ் ஆண்டு 5 பாடநூல் | • **பாடம் 1: தமிழர் கலைகள்**<br>- படிப்போம் (பக்கம் 2)<br>- பண்பாடு அறிவோம் (பக்கம் 3)<br><br>• **பாடம் 2: ஒழுக்கம்**<br>- படிப்போம் (பக்கம் 7)<br>- பண்பாடு அறிவோம் (பக்கம் 8)<br><br>• **பாடம் 3: நட்பு**<br>- படிப்போம் (பக்கம் 12)<br>- பண்பாடு அறிவோம் (பக்கம் 13)<br><br>• **பாடம் 4: பாரதியார்**<br>- படிப்போம் (பக்கம் 16 - 17)<br>- பண்பாடு அறிவோம் (பக்கம் 18)<br><br>• **பாடம் 5: இளங்கோ அடிகள்**<br>- படிப்போம் (பக்கம் 22)<br>- பண்பாடு அறிவோம் (பக்கம் 23)<br><br>• **பாடம் 6: செய்தித்தாள்**<br>- படிப்போம் (பக்கம் 27)<br>- பண்பாடு அறிவோம் (பக்கம் 28) |

# தமிழ்த்திறன் போட்டி 2021

- சிறப்புத் தொகுப்பு -

| | | |
|---|---|---|
| 13 – 14 | தமிழ் ஆண்டு 7<br>பாடநூல் | • <u>பாடம் 1: கூத்து</u><br>- கலந்துரையாடுவோம் (பக்கம் 1 - 2)<br>- பண்பாடு அறிவோம் (பக்கம் 3)<br><br>• <u>பாடம் 2: தமிழிலக்கிய வரலாறு</u><br>- கலந்துரையாடுவோம் (பக்கம் 7 - 8)<br>- பண்பாடு அறிவோம் (பக்கம் 9)<br><br>• <u>பாடம் 3: கவியின்பம்</u><br>- கலந்துரையாடுவோம் (பக்கம் 13 - 14)<br>- பண்பாடு அறிவோம் (பக்கம் 15)<br><br>• <u>பாடம் 4: தமிழர் பண்பாட்டு அடையாளங்கள்</u><br>- கலந்துரையாடுவோம் (பக்கம் 20 - 21)<br>- பண்பாடு அறிவோம் (பக்கம் 22) |
| 15 – 16 | தமிழ் ஆண்டு 9<br>பாடநூல் | • <u>பாடம் 1: தமிழர் ஆடற்கலை</u><br>- தமிழர் ஆடற்கலை (பக்கம் 1 - 2)<br>- செயல் 3 (பக்கம் 8 – 9)<br><br>• <u>பாடம் 4: மாந்தரும் இயற்கையும்</u><br>- மாந்தரும் இயற்கையும் (பக்கம் 31 - 32)<br>- தகவல் பெட்டகம் (பக்கம் 33)<br><br>• <u>பாடம் 5: சிலப்பதிகாரம்</u><br>- சிலப்பதிகாரம் (பக்கம் 39 - 41)<br>- தகவல் பெட்டகம் (பக்கம் 42)<br>- செயல் 3 (பக்கம் 45)<br><br>• <u>பாடம் 6: கணினியும் தமிழும்</u><br>- கணினியும் தமிழும் (பக்கம் 48 - 49)<br>- தகவல் பெட்டகம் (பக்கம் 50) |
| 17 – 18 | தமிழ் ஆண்டு 10<br>பாடநூல் | • <u>பாடம் 1: அரங்கேற்றம்</u><br>- அரங்கேற்றம் (பக்கம் 1 - 2)<br>- தகவல் பெட்டகம் (பக்கம் 3)<br>- செயல் 4 (பக்கம் 12)<br><br>- மொழிபெயர்ப்பு (பக்கம் 17)<br><br>• <u>பாடம் 3: கவியின்பம்</u><br>- தகவல் பெட்டகம் (பக்கம் 26)<br>- செயல் 4 (பக்கம் 31)<br><br>- செயல் 1 (ஆ) (பக்கம் 38 - 39)<br><br>• <u>பாடம் 5: இல்வாழ்க்கை</u><br>- இல்வாழ்க்கை (பக்கம் 43 - 44)<br><br>• <u>பாடம் 6: தொல்காப்பியம்</u><br>- தொல்காப்பியம் (பக்கம் 51 - 52)<br>- தகவல் பெட்டகம் (பக்கம் 53) |

# தமிழ்த்திறன் போட்டி 2021

- சிறப்புத் தொகுப்பு -

| வயதுப்பிரிவு | நூல் | பக்கம் |
|---|---|---|
| 7 – 8 | தமிழ் ஆண்டு 1<br>செயல்நூல் | • **பாடம் 1: தமிழ்ப்பள்ளி**<br>- செயல் 5 (பக்கம் 5)<br>- செயல் 6 (பக்கம் 6)<br>- செயல் 7 (பக்கம் 7)<br><br>• **பாடம் 2: விடுமுறை**<br>- செயல் 2 (பக்கம் 9)<br>- செயல் 3 (பக்கம் 10)<br>- செயல் 4 (பக்கம் 11)<br>- செயல் 5 (பக்கம் 11)<br>- செயல் 6 (பக்கம் 12)<br>- செயல் 7 (பக்கம் 12)<br><br>• **பாடம் 3: நண்பர்கள்**<br>- செயல் 2 (பக்கம் 14)<br>- செயல் 3 (பக்கம் 15)<br>- செயல் 4 (பக்கம் 16)<br>- செயல் 5 (பக்கம் 17)<br><br>• **பாடம் 4: அன்னையர் நாள்**<br>- செயல் 2 (பக்கம் 19)<br>- செயல் 3 (பக்கம் 20)<br>- செயல் 5 (பக்கம் 21)<br>- செயல் 6 (பக்கம் 22)<br>- செயல் 7 (பக்கம் 23)<br><br>• **பாடம் 5: தைப்பொங்கல்**<br>- செயல் 2 (பக்கம் 25)<br>- செயல் 3 (பக்கம் 26)<br>- செயல் 5 (பக்கம் 27)<br>- செயல் 6 (பக்கம் 28)<br>- செயல் 7 (பக்கம் 29) |
| 9 – 10 | தமிழ் ஆண்டு 3<br>செயல்நூல் | • **பாடம் 1: எமது மொழி**<br>- செயல் 2 (பக்கம் 2)<br>- செயல் 4 (பக்கம் 3)<br>- செயல் 5 (பக்கம் 3)<br>- செயல் 7 (பக்கம் 4)<br><br>• **பாடம் 2: முக்கனிகள்**<br>- செயல் 2 (பக்கம் 7)<br>- செயல் 4 (பக்கம் 8)<br>- செயல் 5 (பக்கம் 9)<br>- செயல் 6 (பக்கம் 10)<br>- செயல் 7 (பக்கம் 10)<br><br>• **பாடம் 3: கொடை**<br>- செயல் 2 (பக்கம் 12)<br>- செயல் 3 (பக்கம் 13)<br>- செயல் 5 (பக்கம் 14)<br>- செயல் 6 (பக்கம் 14)<br>- செயல் 7 (பக்கம் 15)<br>- செயல் 8 (பக்கம் 15) |

| | | |
|---|---|---|
| | | • **பாடம் 4: ஒற்றுமை**<br>- அறிவோம் (பக்கம் 17)<br>- செயல் 2 (பக்கம் 17)<br>- செயல் 3 (பக்கம் 18)<br>- செயல் 4 (பக்கம் 18)<br>- செயல் 5 (பக்கம் 19)<br>- செயல் 6 (பக்கம் 19)<br><br>• **பாடம் 5: மட்டக்களப்பு**<br>- செயல் 2 (பக்கம் 22)<br>- செயல் 4 (பக்கம் 23)<br>- செயல் 6 (பக்கம் 24)<br>- செயல் 7 (பக்கம் 24)<br>- செயல் 8 (பக்கம் 25)<br><br>• **பாடம் 6: பண்டாரவன்னியன்**<br>- செயல் 2 (பக்கம் 27)<br>- செயல் 4 (பக்கம் 28)<br>- செயல் 5 (பக்கம் 28)<br>- செயல் 7 (பக்கம் 29)<br>- செயல் 8 (பக்கம் 30) |
| 11 – 12 | தமிழ் ஆண்டு 5<br>செயல்நூல் | • **பாடம் 1: தமிழர் கலைகள்**<br>- செயல் 4 (பக்கம் 3)<br>- செயல் 5 (பக்கம் 4)<br>- செயல் 6 (பக்கம் 4)<br><br>• **பாடம் 2: ஒழுக்கம்**<br>- செயல் 4 (பக்கம் 8)<br>- செயல் 5 (பக்கம் 8)<br>- செயல் 6 (பக்கம் 9)<br><br>• **பாடம் 3: நட்பு**<br>- செயல் 5 (பக்கம் 13)<br><br>• **பாடம் 5: இளங்கோ அடிகள்**<br>- செயல் 4 (பக்கம் 23)<br><br>• **பாடம் 6: செய்தித்தாள்**<br>- செயல் 5 (பக்கம் 29) |